**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

461

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# Feminist Perspective P. Vijay's Poems

**Dr. S. Sajibha**, Assistant Professor, Department of Tamil, Muslim Arts College, Thiruvithancode –174, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0003-9782-403X**
**DOI: 10.5281/zenodo.14752898**

## Abstract

*The poet can enter into a human being by his thoughts and ideas. A poet shines poetically only when the context is clear. Poetry is the foundation of Tamil literature. The poet P. Vijay excelled in poetry. He has written related to feminism and its need of the time in Tamil Nadu. Feminism is a global literature and has no boundaries. Feminism is about creating awareness through education and discipline for women who have been enslaved and suffering for ages and to gain a hold in society. Many women lose their lives because of love. Women are facing various pains and suffering due to family situations. Due to this, they feel sad and tired. Cultural growth and progress occur through academic feminism. So, women should maintain the morals of their lives without fail. If the society wants to rise, women should act with awareness. Feminist influences are deeply embedded in the poet P. Vijay's poetic thoughts. He believes that a better society should be created by the emancipation of women. Many poets and women have made revolutions for women. P. Vijay is on the row. Hence, this article explains the ideas of feminism in P. Vijay's poetry.*

**Keywords:** Feminism, Woman, Emancipation, P. Vijay, Poems.

## References

[1] Parimelazhagar. Thirukkural. Narmata Publishing House, Chennai – 17, 2005.
[2] Bharatiyar. *Bharatiyarm Kavithaigal*. Manikkavasakar Publishing House, Chidambaram, 1987.
[3] Prema, Ra. Penniya Kathaigal. Kavia Publishing House, Chennai, 2004.
[4] Puliyurkesigan. *Natrinai*. Sri Senpaha Publishing House, Chennai, 2010.
[5] Vijay, P. Nampikaiyudan. Kumaran Publishing House, Chennai – 17, 2007.
[6] Vijay, P. "Natpin Natkal. Kumaran Publishing House, Chennai – 17, 2007.
[7] Vijay, P. "Irantatukku Akayam. Kumaran Publishing House, Chennai – 17, 2007.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**

*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*

*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# பெண்ணிய நோக்கில் பா. விஜய் கவிதைகள்

**முனைவர் செ. ஷஜிபா**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

முஸ்லிம் கலைக்கல்லூரி,திருவிதாங்கோடு – 629 174, தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0009-0003-9782-403X**

**DOI: 10.5281/zenodo.14752898**

**ஆய்வுச் சுருக்கம்**

*ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் பூரணமாய் கவிஞன் நுழைந்து கிடக்கிறான். சூழல் வாய்க்கும் போது மட்டுமே கவிஞன் கவிதையாய் மிளிர்கிறான். தமிழிலக்கியத்தின் அடிப்படை கவிதையாகும். கவிஞர் பா. விஜய் கவிதை இலக்கியத்தின் வாயிலாக திரையுலகிற்கு வந்த புதிய உதயம் எனலாம்.பெண்ணியம் என்பது உலகம் தழுவிய ஓர் இலக்கியமாகும். காலங்காலமாக அடிமைப்பட்டு வாடி வதங்கிய நிலையில் இருக்கும் பெண்களுக்கு கல்வியின் மூலமும், ஒழுக்கத்தின் மூலமும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி சமூகத்தில் காலூன்றச் செய்வது பெண்ணியமாகும். பெண்கள் பலர் காதலால் தங்களுடைய வாழ்க்கை இழக்கும் நிலை ஏற்படுகிறது. பெண்கள் குடும்ப சூழ்நிலைகளால் பல்வேறு விதமான வலிகளை வேதனைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பாலியல் பிரச்சனைகளில் ஈடுபட்டு வருவதால் நோய்கள் பல அவர்களை தாக்குகிறது. இதனால் மனவேதனையும்சோர்வும் அடைகிறார்கள். கல்விநெறிப் பெண்ணியத்தின் மூலம் பண்பாட்டு வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படுகிறது. பெண்கள் தங்களுடைய வாழ்க்கையின் ஒழுக்க நெறிகளை தவறாது காத்துக் கொள்ள வேண்டும். சமுதாயம் ஏற்றம் பெற வேண்டுமாயின் பெண்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். அதோடு அடிமை நிலையும் மாற வேண்டும் என்பதை பற்றி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** பெண்ணியம், பெண்கள், விடுதலை, பா. விஜய், கவிதைகள்

## முன்னுரை

கவிஞரின் கவி சிந்தனைகளில் பெண்ணியத் தாக்கங்கள் மிகவும் ஆழமாக பதிந்திருக்கின்றது. கவிஞர்கள் தங்கள் படைப்புகளின் மூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக வேண்டும் என்று எண்ணுகிறார்கள். பெண்களுக்காக எத்தனையோ கவிஞர்களும் பெண்களும் புரட்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வகையில் கவிதைகள் பெண்களின் வளர்ச்சிக்கு குரல் கொடுக்கின்றன. கவிதையை கலைகளின் அரசி என்று தாமஸ் ஆல்வா எடிசன் கூறியுள்ளார். இன்றைய காலத்திற்கு ஏற்றார் போல தமிழ் கவிஞர்களும் வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்தும் வகையிலும் உணர்வுகளை தூண்டக்கூடிய

வகையிலும் கவிதைகளை படித்துள்ளார். அவ்வகையில் கவிஞர் பா. விஜயின் படைப்புகளை பெண்ணிய நோக்கில் ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணிய காதல்**

சங்ககால தமிழர் காதலையும் வீரத்தையும் இரு கண்களாக போற்றினர். எல்லா உயிருக்குள்ளும் இருக்கின்ற உணர்வு காதலாகும். ஒவ்வொருவர் மீதும் இன வேறுபாடு இன்றி காதல் மலர்கிறது. இளம் தலைமுறையினர் இளம் வயதில்சந்திக்கும் சிக்கல்களில் காதல் சார்ந்த துன்பங்களே அதிகம் எனலாம். சமுதாயத்தில் பெரும்பாலான பெண்களின் வாழ்வு காதலால் இழக்கும் நிலையுள்ளது.

**சில வினாடிகள்தான்**
**காதல் பிறக்க ...**
**ஆனால்**
**அது ஜீவிப்பதோ**
**யுகயுகமாய்!**
**கண்களை திறந்து கொண்டு**
**கனவு காண முடியாது**
**ஆனால்**
**காதலித்தால் முடியும் (வள்ளுவர் தோட்டம். ப. 102)**

என்று கவிஞர் பா. விஜய் காதல் வரிகளை மிகவும் சிறப்பாக உணர்வுபூர்வமாக எழுதியுள்ளார். ஒரு பெண்ணை காதலன் எவ்வாறெல்லாம் வர்ணிக்கிறான் என்றால் அவளின் புன்னகையை மின்னும் என்றும், உதடுகள் பூவின் இதழாகும் என்றும், உண்மை நடையோடு வர்ணிக்கின்றான்.

கண்ணும் கண்ணும் கவர்ந்திழுக்கும் கோபத்தில் கன்னம் சிவக்கும் அதுவே ஏக்கம் தீர அழுதுவிட்டால் காதலில் நறுமணம் வீசும் காற்றடிக்கும் இவை எல்லாம் நடந்தேற வேண்டும் எனில் இரவு பகல் தெரியாமல் விழித்திருப்பாள். புசி என்றால் என்னவென்று மறந்திருப்பாள். உறவு என்பது என்ன என்று தெரியாதென்பாள். மனதில் எண்ணும்கவிதையை எல்லாம் எழுதிக் கொண்டிருக்கும்போதே அவளிடம் சின்ன காதல் பூ மணக்கும் அப்போதே பருவ காதல் உற்றெடுத்தும், ஊமை காதல் துளிரெடுத்து வருகிறது. துள்ளிபறந்து கூவிவிட்டால் துளிர்த்தக் காதல் குளிரடித்துக் கொண்டே இருக்கிறது. இந்த பெண்ணிய காதலை மிகவும் கலை நயத்தோடு கற்பனை கலந்து அழகாய் சித்தரித்துள்ளார்.

**பெண்ணின் உடல் வேதனை**

பெண்கள் குடும்பத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரி செய்வதற்காக பணிக்கு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். மகப்பேறு கால நாட்களிலும் குழந்தை பிறந்த பின்பும் பெண்கள் வேலைக்குச் செல்வதால் அவர்கள் உடல் பல வேதனைகளை அடைகிறது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



**பெண்களின் இடுப்பெலும்பை**
**இறுக்கி படைக்க வேண்டுமென்று**
**குறிப்பெடுத்துக் கொண்டான் (கடவுள் வருகிறான் ஜாக்கிரதை. ப. 11)**

பெண்ணின் பணிகளை அவளே பட்டியலிடுகிறாள். மிகவும் குறைந்த சதவீதத்தில் தான் வீட்டு வேலைகளில் ஆண்கள் பங்கு பெறுகிறார்கள். அதுவும் நடுத்தர வர்க்கத்தை சார்ந்தவரிடம் மட்டும் தான் இந்த மாற்றத்தை பார்க்க முடிகிறது. பெண்கள் தங்கள் உடல் வலி, அலுவலக வேலை, கணவனின் கோபம் என போராடும் பெண்கள் பலர் உள்ளனர். அதே சமயம் பெண்களின் ஊதியம் மற்றவர்களுக்கு குறையாமல் கொடுத்து விட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். பெண்களை வேலை செய்யும்இயந்திரமாக நினைக்கிறார்கள். பெண்களை உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் இழிவு படுத்துகிறார்கள்.

**பெண்களின் பாலியல் கொடுமைகள்**

தாய் வழி சமுதாயம் முடித்து தந்த வீடு சமுதாயம் தொடங்கிய காலத்தில் எழுந்த நிலவுடைமை காரணமாக கற்பு வலியுறுத்தப்பட்டது. இந்த கற்புக்கொள்கை உடைக்கப்படுமாயின் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அதன் நிறுவனர்களான குடும்பம் முதலிய பெண்ணடிமைக்குக் காரணமாக அனைத்தும் உடைந்து சிதறி பெண் முற்றிலுமாக விடுதலை அடைந்து விடுவாள். அது போல கற்புக் கொள்கையானது ஆணுக்கும் வலியுறுத்தப்பட்டால் அடிமைத் தளைகள் நீங்கி உண்மையான மனிதநேயம் காக்கப்படும்.

**விபச்சாரியாக இருக்க**
**மிரட்டி உதைத்தது**
**முதலாளிகள் என்னை**
**பூட்சுகால்களால்**
**மிதித்தார்கள் (இரண்டடுக்கு ஆகாயம். ப. 14)**

கற்புநிலை என்று சொல்ல வந்தால் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென்று வைப்போம் என்று பாரதியார் கூறுகிறார். கற்பின்மீது எழுந்த போராட்டத்தில் பெண்களோடு ஆணும் சேர்ந்து போராடும்நிலைகள் பா. விஜயின் கவிதைகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

**கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியம்**

சமூகத்தின் ஒவ்வொரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நீங்காத இயல்புடையது கல்வியாகும். பண்பாட்டு வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் ஆற்றல் மிகுந்த கருவியாக கல்வி விளங்குகிறது.

**ஆம்! நமமூர்**
**கூட்டு ரோட்டில் நிற்கும்**
**ஆட்டு மந்தைகள் மாதிரிதான்**
**நிற்க வைத்திருந்தது மனிதர்களை**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


**கல்வி நிறுவனங்கள் (கடவுள் வருகிறான் ஜாக்கிரதை. ப. 3)**

என்கிறார். இன்றைய காலகட்டத்தில் கருவில் உள்ள குழந்தைக்காகக் கூட கல்வி நிறுவனங்களில் வாசலில் நீண்ட வரிசையில் காத்து நிற்கிறார்கள்.

சமூகத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்கள் யாவும் ஆண்களின் ஆதிக்கத்தின் கீழ் இயங்குவதால் ஆண்களே கல்விக் கோட்பாடுகளை உருவாக்கும் சூழல் நிலவியதால் கல்வி நெறிப் பெண்ணியத்தின் தேவை எழுந்தது. கோயில்களில், தொலைக்-காட்சிகளில், பட்டிமன்றங்களில் காரசாரமாகப் பேசுவதற்கும் தான் இப்பெண்ணியம் பயன்படுகிறது. சுயநல போக்கினாலும் ஆண்களைப் போல செய்தல் என்று இயங்குவதாலும் தங்களுடைய நடுத்தர வர்க்கக் குணத்தினாலும் சமூகத்தில் இயங்குகின்ற பல புரட்சிகரமான பெண்ணிய இயக்கங்களோடு கலந்து பணியாற்றாமல் விலகிக் கொள்கின்றனர்.மேலும் இக்கல்வி நெறிப் பெண்ணியவாதிகள் பெண்களுக்கான உரிமையைப் பெறுவதற்காக பெண்களை ஒரு சமூகமாக திரட்டுதல், பெண்களை அரசியல் மயப்படுத்தல் போன்றவற்றில் கூட அக்கறை காட்டுவதில்லை என்பது கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியமாக உள்ளது.

### சமுதாயத்தில் பெண்களின் நிலை

ஆண், பெண் இரு பாலரும் கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு பெண்பாற் புலவர்களும் அவர்தம் பாடல்களும் சான்றுகளாகும். சங்ககால பெண்கள் கல்வி சுதந்திரமும், படைப்பு சுதந்திரமும் பெற்றிருந்தார்கள். சங்ககாலத்துப் பெண்கள் காதல் சுதந்திரமும், திருமண சுதந்திரமும் பெற்றிருந்தார்கள் என்பதற்கு களவு வாழ்க்கை, உடன்போக்கு போன்ற பல ஆதாரங்கள் இருந்தாலும், கவிஞர் பா. விஜய் தற்போதைய பெண்களின் நிலையையே சிறப்பாக சித்தரித்துள்ளார். இலக்கியத்தில் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு இருந்தார்கள். பொழுது பாராமல் எல்லா நேரங்களிலும் பெண்கள் விருந்தோம்பல் செய்வார்கள் என்று நற்றிணை பாடல், **"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" (நற்றிணை. 142)** என்று குறிப்பிட்டுள்ளது. கவிதைகள் வழியே பெண்களின் அடிமைத்தனத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்கள் சாதனைகள் புரியவும் சரித்திரம் படைக்கவும் படைக்கப்பட்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. கவிஞர் பெண்களின் உணர்வுகளுக்கு மிகவும் சிறப்பாகவே மதிப்பளித்துள்ளார் என்பதையும் நாம் தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது.

### பெண்களின் ஒழுக்க நிலை

ஒழுக்கம் என்ற தமிழ்ச்சொல் 'ஒழுங்கு' என்பதிலிருந்து வந்ததாகும். பெண்கள் ஒழுக்கம் தவறினால் எல்லாமே தவறிப்போகும். உடலுக்கும், உள்ளத்திற்கும் துன்பம் தராத செயல்கள் யாவும் ஒழுக்கமாகக் கருதப் பெற்றதாகும்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும் (குறள்., 131)**

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**


என்று திருக்குறளில் கூறுவது போல், உயிரினும் மேலானதாக பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டியது ஒழுக்கமாகும். ஒழுக்கமாக வாழாவிடில் பெண்களின் அறிவு மிகவும் சிறந்ததாக கவிஞர் கூறியுள்ளார்.பெண்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் வாழ்வியல் ஒழுக்க நெறிகளை கடைபிடித்தல் வேண்டும் பெண்களின் தகாத ஒழுக்கத்தினால் நோய்கள் பல ஏற்படுவதாககூறியுள்ளார்.

**ஆணும் பெண்ணும் கூடினர்**
**உலகம் முழுக்க**
**எய்ட்ஸ் நோய்களும்**
**அனுதினமும் கூடின (வள்ளுவர் தோட்டம். ப. 214)**

பெண்களின் ஒழுக்கம் மிகவும் சிதைந்துகொண்டே இருக்கிறது. ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினால் பெண்களின் வாழ்வு உயர்ந்துநிற்கும். பெண்களை வாழ்விக்க மிகவும் அவசியமாக இருப்பது ஒழுக்கமேயாகும்.

**கவிஞரின் படைப்பில் பெண்ணியம்**

சமுதாயம் ஏற்றம் பெற்றிட பெண்கள் விழிப்புணர்வுடன் போராடுதல் வேண்டும். பெண்களுக்கான உரிமை போராடி பெறுவதன் வாயிலாக அடிமை நிலை மாற்றம் பெற்று முன்னேற்றம் அடையலாம்.

**வட்டமிடும் பருந்துகளே நாங்கள் உங்கள்**
**வசதிக்கு வந்துதித்த நாகம் அல்ல**
**திட்டமிடும் நாரைகளே நாங்கள் உங்கள்**
**தீனிக்கென்று பிறந்துவிட்ட மீன்கள் அல்ல**
**கொட்டமிடும் நரியினமே நாங்கள் உங்கள்**
**கொள்பசிக்கு கிடைத்துவிட்ட கறியும் அல்ல**
**பட்டமிட்டார் அறிவீரோ நாங்கள் - நெருப்பு**
**பற்றாமலே எரிகின்ற சூரியக் கூட்டம் (நிழலில் கிடைத்த நிம்மதி. ப. 18)**

இவ்வரிகள் மூலம் பெண்களின் உரிமைப் பாதுகாப்பை அறிய முடிகிறது.

கவிஞர் பா. விஜய் கவிதைகளில் பெண்ணை தெய்வமாய் வைத்து பூஜை செய்து வருகிறார்கள். அதே நேரத்தில் பலவிதமாக இழிவு செய்யப்பட்டு வாழ்வதையும் கண்கூடாக காண முடிகிறது. பெண்ணியம் பெருமையடைய அவர்கள் அடிமை விலங்கைத் தவிர்த்து பெண்ணிற்கு நீதி அரசராய் நாம் இருக்க வேண்டும் என்று கவிஞர்கள் கூறுகிறார்கள். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி வையம் தழைக்குமாம் என்கிறார் பாரதியார். சமூகத்தின் சரிபாதியான பெண்ணின் இருத்தலைப் பற்றி பேசுவது பெண்ணியம். இது ஒரு சமூக அக்கரையின் வெளிப்பாடு என்பதால் பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் உலகம் முழுவதும் பெருகி வருகிறது. இது போலவே பா. விஜய்யின்கவிதைகளும் பெண்ணின்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

சிக்கல்களை நமக்கு தெளிவு படுத்துகிறது. புத்தம் புதிய சமுதாயம் காண கவிஞர் விரும்புகிறார். தன்னுடைய கவிதைகள் சிறப்படைய வேண்டும் என்று எண்ணுபவர் கவிஞர். ஒரு குழந்தை பிறக்க வேண்டுமானால் அது ஒரு பெண்ணால் மட்டுமே முடியும். பெண்ணே முதன்மை உடையவள். அப்பெணையே தாயாக வணங்குகிறேன் என்று பெருமைப்பட சொல்பவர். பெண்கள் தாழ்மை மனப்பான்மையை நீக்க வேண்டும். பெண்என்றாலே அழகுதான். பெண் பொறுமையோடும், தியாக மனப்பான்மையோடும், அடக்கத்தோடும், இரக்கத்தோடும் இருக்கும் தன்மை கொண்டவள்.

**முடிவுரை**

பெண்ணிய வாழ்வில் புதைந்து கிடக்கும் விருப்பங்கள், உணர்வுகள், நம்பிக்கைகள், கொடுமைகள் மற்றும் குமுறல்கள் யாவும் எளிமையாக எல்லாரும் புரியும் விதத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. காதலன் ஒரு பெண்ணை வர்ணிக்கும் நிலையையும், பெண்கள் உடல் அளவில் சந்திக்கும் பிரச்சனைகளையும், பெண்களுக்கு ஏற்படும் பாலியல் கொடுமைகளையும், பெண்களின் ஒழுக்க நெறியும், கவிஞரின் கல்வி நெறிப் பெண்ணியத்தையும் பற்றி இக்கட்டுரையின் வழியாக மிகவும் தெளிவாக தெரிந்து கொள்ள முடிந்தது.

**குறிப்புகள்**

[1] *திருக்குறள்.* நர்மதா பதிப்பகம், சென்னை 17, 2005.
[2] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.
[3] இரா. பிரேமா. *பெண்ணியக்கதைகள்.* காவியா பதிப்பகம், சென்னை, 2004.
[4] புலியூர் கேசிகன். *நற்றிணை.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2010.
[5] பா. விஜய். *நம்பிக்கையுடன்.* குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.
[6] பா. விஜய். *நட்பின் நாட்கள்.* குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.
[7] பா. விஜய். *இரண்டடுக்கு ஆகாயம்.* குமரன் பதிப்பகம், சென்னை -17, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.